# சென்னை சகோதயா கூட்டமைப்பு பள்ளிகளுக்கான மாதிரி பொதுத்தேர்வு – 2020

## தமிழ் விடைத்தாள் மதிப்பீட்டு வழிகாட்டி – 2020

**வகுப்பு: பத்து** **தமிழ்** **மதிப்பெண்கள் - 80**

## பகுதி - அ

| | | |
|---|---|---|
| I. | 1. (ஈ) கோமோலுங்குமா | 1 |
| | 2. (இ) 6 | 1 |
| | 3. (அ) புனித அன்னை | 1 |
| | 4. (ஆ) டேராடூன் | 1 |
| | 5. (ஈ) ஷெங்மூபெங் | 1 |
| 2. | 1. (அ) கொற்கை | 1 |
| | 2. (அ) 6 | 1 |
| | 3. (இ) கொற்கை, மதுரை | 1 |
| | 4. (ஈ) 2000 | 1 |
| | 5. (ஆ) கொற்கை | 1 |
| 3. | தலைப்பு | ½ |
| | திருந்தாப் படிவம் | 1 |
| | திருந்திய படிவம் | 2½ |
| | சொற்களின் எண்ணிக்கை | 1 |

## பகுதி - ஆ

4. (i) , (ii)

| | |
|---|---|
| அனுப்புநர் | 1 |
| பெறுநர் | ½ |
| இடம், தேதி | ½ |
| மதிப்பிற்குரிய | ½ |
| பொருள் | ½ |
| கடிதச் செய்தி | 2 |
| இப்படிக்கு | ½ |
| உறைமேல் முகவரி | ½ |

5. முன்னுரை 1
பொருளுரை (உப தலைப்புகள்) 4½
முடிவுரை 1
மேற்கோள் 1

## பகுதி - இ

6. 1. (அ) கண் 1
2. (அ) நடவாமை 1
3. (ஈ) தேர்ப்பாகன் 1
4. (ஆ) முழவு உறழ் தடக்கை 1
5. (இ) வரவேற்பு 1

7. 1. (ஈ) முதற்பொருள் 1
2. (இ) உம்மைத்தொகை 1
3. (இ) கொண்டுகூட்டுப் பொருள்கோள் 1
4. (அ) குறிஞ்சி நிலம் 1
5. (ஆ) பன்னிரண்டு 1

8. 1. (ஈ) படித்த பாரி 1
2. (ஆ) அமுதம் போன்ற மொழி 1
3. (ஈ) பறந்தது 1
4. (இ) படித்து வந்தான் 1
5. (ஆ) செய்வேன் 1

9. 1. (இ) அடுக்குத்தொடர் 1
2. (அ) எழுவாய்த் தொடர் 1
3. (அ) வினைத்தொகை 1
4. (இ) தற்குறிப்பேற்ற அணி 1
5. (ஈ) மரபு வழுவமைதி 1

10 . 1 (ஈ) செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகக் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும். 1
2. (ஈ) பாலை நிலத்திற்குரிய பறவைகள் - புறா , பருந்து 1
3. ஆ) வினாஆறு வகைப்படும். 1
4. (இ) வைகறை - இரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை 1

5. (அ) பாடாண் திணை – ஆண்மகனின் சிறப்பைக் கூறுகிறது. 1

## பகுதி - ஈ

11.

| | | |
|---|---|---|
| 1. | 1906 | 1 |
| 2. | பொன்னுச்சாமி, சிவகாமி | 1 |
| 3. | சால்வன் குப்பம் | 1 |
| 4. | ஞானப்பிரகாசம் | 1 |
| 5. | சரபையர் | 1 |

---

12. 1. (இ) கம்பராமாயணம் 1
2. (ஆ) கும்பகர்ணன் 1
3. (ஈ) ஆறு 1
4. (அ) கம்பர் 1

---

13. 1. எத்தன்மைத் , மெய்ப்பொருள் 1

2. அறிவு, நீளும் 1

---

**14.** **(2 x 4 = 8)**

1)குசேலபாண்டியன் மிகுந்த கல்வி அறிவு மிக்கவன். இடைக்கானார் என்னும் புலவர் கபிலன் மேல் அன்பு கொண்டவர், நட்பு கொண்டவர். இடைக்காடனார் கவிதையை பாண்டியரின் அவைக்குச் சென்று படித்தார். மன்னன் புலவரை மதிக்கவில்லை.

- இறைவனிடம் முறையிடல்
- இறைவன் கோவிலை விட்டு நீங்குதல்.
- மன்னன் இறைவனை வேண்டுதல்.
- மன்னனை மன்னித்து அருள் புரிதல்.

: **2. கவிஞன் நானே,**

- காலத்தைக் கணிப்பவன்.
- காலத்தை வென்றவன்.
- பொன்னை விட விலைமிகுந்தது கல்விச் செல்வம்
- படைத்தல் காத்தல், அழித்தல் இம் மூன்றும் இறைவனுக்கு கவிஞனுக்குமே சொந்தமானவை.
- பதவி கொண்டு மிரட்டும் போர் வாளுக்கும் பயப்பட மாட்டேன்.
- பாசம் மிகுந்தவன்.

- புகழ்ச்சிக்கு மயங்காதவன்.
- இகழ்ச்சிக்கு மடியாதவன் மாற்றம் கவிஞனின் மானிடத் தத்துவம்.
- மாறும் உலகின் மகத்துவம் (மேன்மை) அறிபவன்.

**3. கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலி .**

- மலர்ப்படுக்கை
- இழந்து வாடுகின்றேன்
- இரங்கி வாடுகிறேன்
- வழி அறியேன்
- கருணையன் புலம்பல்

**4. நாட்டுப் படலம் (கோசல நாட்டின் பெருமை)**

கோசல நாட்டில்

- வறுமை இல்லாததால் - கொடைக்கு (தானம்) இடமில்லை.
- போர்புரிவோர் இல்லாததால் - உடல் வலிமை காட்ட வாய்ப்பில்லை.
- பொய்மை இல்லாததால் - மெய்மை விளங்கவில்லை
- கேள்விச் செல்வம் மிகுவதால் - அறியாமை சிறிதும் இல்லை

---

**15.1. காற்று மாசுபாடு: (மனிதனால் மாசடையும் காற்று) (2 x 5 = 10)**

- குப்பைகள், நெகிழிப்பைகள், மெது உருளைகள் போன்றவற்றை எரிப்பது.
- குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டப்பட்ட அறை ஆகியவற்றை மிகுதியாகப் பயன்படுத்துவது.
- பட்டாசுகளை மிகுதியாக வெடிப்பது.
- புகை வடிகட்டி இல்லாமல் தொழிற் சாலைகளை இயக்குவது.
- தனி மனிதரின் மிகுதியான ஊர்திப் பயன்பாடு.
- வானூர்திகள் வெளியிடும் புகை.

**நீக்கும் வழிமுறைகள்**:-

- மரங்களை வளர்க்க வேண்டும்.
- குப்பை மேலாண்மையை மேற்கொள்ள வேண்டும்.
- பொதுப் போக்குவரத்திற்கு முன்னுரிமை தர வேண்டும்.

- மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளை மிகுதியாகப் பயன்படுத்த வேண்டும்.
- கச்சா எண்ணெய், நிலக்கரி முதலிய புகைவடிவப் பொருள்களைத் தவிர்க்க வேண்டும்.
- வீட்டுச் சமையலுக்கு விறகுகள் பயன்படுத்துவதைக் கை விட வேண்டும்.

**2. செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகள்:-**

- நமது வாழ்க்கையையும் வணிகத்தையும் வளப்படுத்திக் கொண்டிருக்கின்றது.
- ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்புகள் அறிமுகமாகும் போதும் பழைய வேலைவாய்ப்புகள் புதிய வடிவில் மாற்றம் பெறுகின்றன.
- மனித இனத்தைத் தீங்குகளிலிருந்து காக்கின்றன.
- உடல் நலத்தைப் பேண
- கொடிய நோய்களைத் தொடக்க நிலையில் கண்டறிய.
- மருத்துவம் செய்யும் முறைகளைப் பட்டறிவு மிக்க மருத்துவரைப் போல பரிந்துரை செய்ய.
- செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.
- மின்னணுக் கல்வியறிவு, மின்னணு சந்தை செயற்கை நுண்ணறிவின் மூலம் பயன்படுத்துவதால் வாழ்க்கையை எளிதாக்க, வெற்றியடைய மிக உதவியாக உள்ளது.
- எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவு, நான்காவது தொழில் புரட்சியின் தொழில் நுட்பங்களை அறிய, வளப்படுத்த உதவுகிறது.
- மனிதனின் கண்டுபிடிப்பில் நன்மைகள் தீமைகள் இருப்பினும் நன்மைகளை நாடி, தொழில் நுட்பம் அளிக்கும் வியக்கத்தக்க தன்மைகளைப் புரிந்து வரவேற்பதே நாம் ஒவ்வொரு துறையிலும் முன்னேறுவதற்கான வழிவகையாகும்.

**3.நிகழ்கலை:-**

கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் தருவன; கருத்துடன் கலைத்திறனை நோக்காகக் கொண்டு காலவெள்ளத்தைக் கடந்து நிற்பன; ஆடல், பாடல், இசை, நடிப்பு, ஒப்பனை, உரையாடல் வழியாக மக்களை மகிழ்வடையச் செய்வன; சமூகப் பண்பாட்டுத்தளத்தின் கருத்துக் கருவூலமாக விளங்குவன; நுட்பமான உணர்வுகளின் உறைவிடமாக இருப்பன. மக்கள் பண்பாட்டின் பதிவுகள் நிகழ்கலைகள்.

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனிகொடுத்துக் கவலையைப் போக்குகின்றன; சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன.

## 4.தமிழ்ச்சொல் வளம்

சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும் தமிழ் மட்டும் அதில் தலைசிறந்தாகும்.

> ‘‘தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும் போது, தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத்தெளிவாகத் தோன்றும். தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள என்கிறார் கால்டுவெல்.

## 5. மொழிபெயர்ப்பு – பயன்கலை

இது மொழிபெயர்ப்புக் காலம். காலையில் எழுந்தவுடன் நாளிதழ் படிப்பு, மொழிபெயர்ப்பு மூலமே நமக்குச் சாத்தியமாகிறது. இரவு தொலைக்காட்சியில் காணும் கேட்கும் செய்திகளும் மொழிபெயர்ப்பு மூலமே கிடைக்கின்றன. இடையில் நம் பணிகள் பலவற்றிலும் மொழிபெயர்ப்பின் துணை இருந்துகொண்டே இருக்கிறது. இன்றைய வளரும் நாடுகளில் அறிவியலை உருவாக்க அரசியலை உருவாக்க – பொருளியலை உருவாக்க – சமூகவியலை உருவாக்க - இலக்கியத்தை உருவாக்க மொழிபெயர்ப்பே உதவுகிறது. மொழிபெயர்ப்பு மனிதர்களையும், நாடுகளையும், காலங்களையும் இணைக்கிற நெடுஞ்சாலையாக இருக்கிறது. காலத்தால், இடத்தால், மொழியால் பிரிக்கப்பட்ட மானுடத்தை இணைக்கிறது; கடந்த காலத்தை எதிர்காலத்துடன் இணைக்கும் அது மனிதவாழ்வின் ஒரு பகுதியாகவே இருக்கிறது; பல மொழிகளிலும் காணப்படும் சிறப்புக்கூறுகளை எல்லாம் ஒருங்குசேர்த்து அனைவருக்கும் பொதுமையாக்குகிறது.

மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை அறியமுடிகிறது. அதிலிருந்து நல்லனவற்றை நாம் பெற்றுக்கொள்ள முடிகிறது; பிறமொழி இலக்கிய அறிவு கிடைக்கிறது. அதன்மூலம் நம் இலக்கியத்தை வளப்படுத்த முடிகிறது. உலகப்புகழ் பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கியப் படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் **பயன்கலை** என்று குறிப்பிடுவார்கள்.

16. 1. **கோபல்லபுரத்து மக்கள்** **( 1 x 61/2 = 61/2)**

முன்னுரை
- அதிகாலை நேரம்
- அன்னமய்யா வருகை
- நேசப் புன்னகையும் நேயமும்
- பொருத்தமான பெயர்
- விருந்தோம்பல்
- முடிவுரை.

2. **இராமானுசர்**

- முன்னுரை
- பூரணரைச் சந்தித்தல்
- மறைபொருள் அருள்
- அருமருந்தான திருமந்திரம்
- அருள் உள்ளம்
- முடிவுரை

3. **மங்கையராய்ப் பிறப்பதற்கே…**
- முன்னுரை
- எம்.எஸ்.சுப்புலட்சுமி
- பால சரஸ்வதி
- ராஜம் கிருஷ்ணன்
- கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்
- சின்னப் பிள்ளை
- முடிவுரை